# ஆரம்பம்

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் வெளியீடு — இல: 3, 22 வது ஒழுங்கை கொழும்பு 3
பிரசித்த செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

மலர்: 4 ஏப்ரல் 1978 விலை 35 சதம் இதழ்: 1


# ஏகோபித்த எதிர்ப்பு

**தொழிலுறவுகள் பற்றிய வெள்ளையறிக்கையைப் பகிரங்கமாகக் கண்டித்து அதிலடங்கிய தொழிலாள வர்க்கத்தைப் பாதிக்கும் யோசனைகளைச் செயலாக்குவதற்கு எதிராக வேலைநிறுத்தம் செய்வது உட்பட இயலுமான சகல வழிகளாலும் எதிர்க்க வேண்டுமென்ற பிரேரணைக்கு கடந்த மார்ச் முதலாந் திகதி ஹைட் பார்க்கில் நடந்த கூட்டத்தில் இடைவிடாது பெய்த மழையையும் பொருட்படுத்தாது இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக நகராது நின்ற வண்ணம் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் ஆயிரக்கணக்கான அங்கத்தவர்கள் ஏகமனதாக வாக்களித்தனர்.**

## பத்தாயிரத்துக்கு மேலான அட்டைகள் விநியோகம்

மேற்படி கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக பத்தாயிரத்துக்கு மேலான அங்கத்தவர்களுக்கு விண்ணப்பத்தின் பேரில் பிரவேச அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன. பிற்பகல் நாலு மணிக்கு கூட்டம் ஆரம்பமாவதற்கு நியமிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்நேரம் நெருங்குவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் தொட்டே நாலா பக்கமும் வானமிருண்ட வண்ணம் மழை பொழியத் தொடங்கிய போது மேசை மீது வைக்கப்பட்டிருந்த வெள்ளையறிக்கைப் பிரதியையும் அதனோடு இருந்த ஏனைய பத்திரங்களையும் தூக்கியெறியுமளவுக்கு வேகமாகக் காற்று வீசியது.

## இடைவிடாது மழை பெய்தாலும் தொடர்ந்து கூட்டத்தை நடத்துவோம்

கொட்டும் மழையின் மத்தியில் சங்கத்தின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் ஆகியோருடன் இன்னும் பலர் மேடை மீது நனைந்த வண்ணம் நின்று கொண்டிருக்க ''இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்திற்கு வெற்றியுண்டாகட்டும்'' என்று எழுப்பப்பட்ட பேரிரைச்சலினால் உண்டாகிய உற்சாகத்துடன் தலைவர் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். கூட்டம் கூடப்பட்டதன் நோக்கத்தை அவர் எடுத்துக் கூறி, பொதுச் செயலாளத் தோழர் பாலா தம்புவை உரையாற்ற அழைத்தார்.

மழையினால் ஏற்பட்ட இடைஞ்சல் காரணமாகக் கூட்டத்தை நடத்துவதா பின் போடுவதா என்பதைத் தீர்மானிப்பதற்கு அங்கத்தவர்களுக்கு உரிமையுண்டென்பதை தோழர் பாலா விளக்கினார். அத்தகையதொரு தீர்மானத்தின்மீது அங்கு வருகை தந்திருந்த அங்கத்தவர்கள் அனைவரையும் மேடைக்கு முன்னால் வந்து கைகளையுயர்த்தி தமது கருத்தை வெளியிடுமாறு பொதுச் செயலாளர் கேட்டுக் கொண்டார். மேடைக்குப் பின்புறத்தில் கட்டி முடிக்கப்படாத கட்டிடத்திலும், பிரதான வீதிக் கருகாமையில் இருந்த கட்டிடங்களின் ஓரங்களிலும் ஒதுங்கியிருந்த அங்கத்தவர்கள் அனைவரும் மைதானத்திற்குள் பிரவேசித்து தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி கூட்டம் நடத்தவேண்டும் என்ற பிரேரணைக்கு ஆதரவாக ஏகமனதாக வாக்களித்தனர்.

## மும்மொழிகளிலும் தீர்மானம்

கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கண்டனத் தீர்மானம் மும்மொழிகளிலும் வாசிக்கப்பட்ட பின் பொதுச் செயலாளத் தோழர் தனது உரையை ஆங்கிலத்தில் ஆற்றினார். அதனைச் சங்கத்தின் நிறைவேற்று சபை உறுப்பினர் தோழர் எச். பி. ஹரிஸ் சந்திரா சிங்களத்தில் மொழிபெயர்த்தார். கூட்டத்தின் முக்கியத்துவம் கருதி தமிழ் தவிர்ந்த வேறு மொழி ஏதேனும் தெரியாத அங்கத்தவர்களுக்காக தமிழில் மொழி பெயர்ப்பு வழங்க ஒழுங்கு செய்யப்பட்டிருந்தாலும் அதற்கான அவசியம் ஏற்படவில்லை.



## விபரீத விளைவுகள்

தாச ஸ்தாபனத்தில் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் கிளை அமைக்கப்பட்ட வரலாற்றை (4ம் பக்கம் பார்க்க) பூரணமாக விளக்கிய தோழர் பாலா, தொழிலுறவுகள் தொடர்பான வெள்ளையறிக்கையென்று சொல்லப்பட்டது சட்டமாக்கப்பட்டால் என்ன நடக்கும் என்பதை எடுத்துக் காட்டவே அச்சம்பவத்தை விபரித்ததாகக் கூறினார். ''முதலில் வேலை நிறுத்திய 27 தொழிலாளர்களுடன் ஒற்றுமை தெரிவித்து வேலை நிறுத்தம் செய்த 2000 தாச ஊழியர்களும் இச்சட்டத்தினால் தமது வேலையைத் தாமாக நீக்கிக் கொண்டதாகப் பிரகடனப் படுத்தப்படுவர். முதல் நாள் வேலை நிறுத்திய பின் கதவடைப்புச் செய்யப்பட்ட 27 மின்னியல் தொழிலாளர்களுக்கும் அதே கதியே நேரும். மேலும் வேலை நிறுத்தம் செய்த சகலரும் குற்றம் செய்தவர்களாகக் கருதப்பட்டு பொலீஸாரால் வழக்குத் தொடரப்பட்டு சிறையில் தள்ளப்படலாம். அது மட்டுமல்லாது பொதுச் சபையின் தீர்மானத்திற்கிணங்க ஒவ்வொரு வேலைத் தலங்களிலும் இன்று வேலையை நிறுத்திய நீங்கள் அனைவரும் இந்த நகல் சட்டத்தின் கீழ் அது சட்டமாக்கப்பட்டால் உங்கள் வேலையைத் தாமாக நீக்கிக் கொண்டதாகக் கருதப் படுவீர்கள். நாளைய தினம் நீங்கள் வேலைக்குச் செல்கையில் உங்களின் தொழில் வழங்குவோர் ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பியவர்களைத் தெரிந்தெடுத்து வேலை வழங்கலாம். வேறு முறையில் இதைச் சொல்வதானால் இது சட்டமாகினால் ஆயிரமாயிரமான இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் அங்கத்தவர்கள் கூட்டத்திற்கு வருவதற்காக சட்டத்தை மீறுமல் இனி எப்பொழுதாவது எமக்கு ஒரு பொது அங்கத்தவர் கூட்டத்தை வைக்க முடியாதிருக்கும்.

## தமிழில் இல்லை

பாராளுமன்றத்திற்கு இறுதியாகக் கொண்டு வரப்படும் சட்டமாகத் தீர்மானிக்கப்படு முன் தொழிற் சங்கங்களும், தொழில் வழங்குவோர்களும் கூறவிருப்பதைப் பற்றி அறிந்து கொள்வதற்காக இதனை வெள்ளையறிக்கையாக வெளியிட்டதாகக் கூறுகிறார்கள். நாங்கள் தொழிற் திணைக்களத்தில் கேட்ட போது உத்தியோக பூர்வமாக ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் இரண்டு பிரதிகள் தரப்பட்டன. தமிழில் பிரதியொன்று இருக்கின்றதா எனக் கேட்ட போது அது தயாராக இல்லாததால் மிகவும் வருத்தம் தெரிவிக்கப்பட்டது. திரு. ஜே. ஆர். ஜயவர்தன தமிழ் பேசும் மக்களைப் பற்றி மிகவும் அக்கறை கொண்டுள்ளாரென நான் நினைக்கிறேன். அவரின் அமைச்சரவையில் உள்ள தொழிலமைச்சர் உட்பட சகல அமைச்சர்களும் தமிழ் பேசும் மக்களில் அக்கறை கொண்டுள்ளனர் என நான் நம்புகின்றேன். தங்களை நல்ல முறையில் நடத்தாவிட்டாலும் இந்நாட்டிலுள்ள சகலரும் சமமாக நடத்தப்பட வேண்டுமென அவர்கள் விரும்புகின்றார்கள். இப்பொழுது அவர்கள் மிகவும் கூடாத ஒரு சட்டத்தைத் தயாரிக்கிறார்கள். தொழிற் சங்கங்கள் இது ஒரு நல்ல சட்டமென்று ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்களென்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் இக்கூடாத சட்டத்தை உண்டாக்க முன் அதைப் பற்றி தொழிற் சங்கங்களும் தொழிலாளர்களும் என்ன சிந்திக்கின்றார்களென்பதைக் கூறுவதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குவதாகவாவது காட்டிக் கொள்ள விரும்புகிறார்கள். அவ்வாறு செயவதற்காக வெள்ளையறிக்கையை ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வெளியிட்டுள்ளார்கள். இன்னும் தமிழில் வெளியிடவில்லை.

6ம் பக்கம் பார்க்க

# தார்மீக சீடர்களின் செயல்

கடந்த மார்ச் மாதம் 7ம் திகதி தொழிலுறவு தொடர்பான வெள்ளையறிக்கைக்கு எதிராக மறியல் நடவடிக்கையிலீடுபட்ட தோழியொருவர், யூ. என். பீ. குண்டர்கள் இருவரால் தாக்கப்பட்டு அவா கீழே விழுந்ததும், கால்களால் உதைக்கப்பட்டார் என்ற செய்தி கடதாசி கூட்டுத்தாபனத்திலுள்ள இலங்கை வர்த்தக ஊழியர் சங்க கிளையிலிருந்து எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கேவலமான தாக்குதலுக்கு உட்பட்டிருப்பது அக்கிளையின் நிர்வாக சபையின் உறுப்பினராவர். மறியல் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திர தொழிற்சங்க தோழர் ஒருவர் தாக்கப்பட்ட போது அவரைக் காப்பாற்றுவதற்கு இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் கிளையினது செயலாளர் முன் வந்த சமயத்திலேயே இத் தோழி தாக்குதலுக்குள்ளானார். கிளையின் காரியதரிசியும் தாக்கப்பட்டார். இத்தோழி பின்னர் சிகிச்சைபெறும் பொருட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் கீழ் இயங்கும் தேசிய ஊழியர் சங்கத்தின் உறுப்பினரொருவராகிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் போலி பாதுகாப்பு ஊழியரொருவராலும் அவரது சகாவினாலுமே இத்தாக்குதல் நடாத்தப்பட்டதாக தாக்குதலுக்குட்பட்ட இருவர் கம்பனித்தெரு பொலீசில் அன்றய தினமே முறைப்பாடு செய்துள்ளதுடன் மறுதினத்தில் கூட்டுத்தாபன நிர்வாகிகளுக்கும் முறைப்பாடு செய்துள்ளனர்.

மறியல் நடவடிக்கையிலீடுபட்டபின், மீண்டும் கூட்டுத்தாபனத்தினுள் செல்லும் போதே இத் தாக்குதல் நடைபெற்றது. அவர்கள் மறியல் செய்வதற்காக வெளியேறும் போது குழப்பத்தை உண்டு பண்ணுவதற்காக இக் குண்டர்கள் இருவரும் சுலோக அட்டைகளைப் பறித்து மண்ணெண்ணை ஊற்றி கூட்டுத்தாபன வளவுக்குள் போட்டு கொளுத்தினர்கள்.

இதுமாதிரியான தாக்குதல் ஒன்று பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் தலைமையலுவலகத்திலும் நடைபெற்றுள்ளது. அங்குள்ள இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் செயலாளர் தாங்கள் குண்டர்களால் தாக்கப்பட்டிருப்பதாக கொள்ளுப்பிட்டி பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இவைதவிர, குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு முன்பாக மறியல் நடவடிக்கையிலீடுபட்டிருந்த அரசாங்க ஊழியர்களைத் தாக்குவதற்கு சென்ற குண்டர்கள் எதிர்தாக்குதலுக்குள்ளாகி ஓடிவிட்டார்கள் என்ற செய்தியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுத் தொழிற்சங்கப் பிரகடனத்தால் தொழிலுறவு வெள்ளையறிக்கை முற்றுக நிராகரிப்பு

**ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் தொழிலுறவுகள் பற்றிய வெள்ளையறிக்கையை முற்றுக நிராகரிப்பதென கூட்டுத் தொழிற் சங்க நடவடிக்கைக் குழுவினுல் தீர்மானிக்கப் பட்டு பதின்மூன்று தொழிற் சங்கங்களால் கூட்டுத் தொழிற் சங்கப் பிரகடனமொன்று வெளியிடப்பட்டுள்ளது அரசாங்க தனியார் மற்றும் கூட்டுத்தாபனங்களிலும் வங்கிகளிலும் தொழிலாளர்களைப் பிரநிதித்துவம் வகிக்கும் பிரதான தொழிற்சங்கங்கள் யாவும் இப்பிர கடனத்தில் கைச்சாத்திட்டுள்ளன.**

**சில வருடங்களாக ஒற்றுமை குன்றிக் காணப்பட்ட தொழிற் சங்க ஸ்தாபனங்கள் பல தமது அரசியல் வேறுபாடு எப்படி இருப்பினும் முதலாளித்துவ வர்க்கத்தினுல் தொழிலாள வர்க்கத்திற்கெதிராக முயற்சிக்கப்படும் நடவடிக்கைகளை முறியடிக்கும் குறிக்கோளுடன் தொடர்ந்து ஒன்றிணைந்து செயலாற்றுகின்றன.**

அமைச்சரவை உபகுழுவொன்றினுல் தயாரிக்கப்பட்டு தொழிலுறவுகள் பற்றிய வெள்ளையறிக்கையென்று 1978 ஜனவரி 31ந் திகதி தொழிலமைச்சினுல் வெளியிடப்பட்ட நகல்சட்டத்தைபிரகடனத்தில் கைச்சாத்திட்ட தொழிற்சங்கங்கள் பரிசீலனை செய்து முற்றுக நிராகரிப்பதாக அப்பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம், இலங்கை வங்கி ஊழியர் சங்கம், இலங்கை தொழிலாளர் சம்மேளனம், இலங்கை தொழிற்சங்கங்களின் சம்மேளனம், இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை ஆசிரியர் சங்கம், அரசாங்க ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், பொதுச்சேவை தொழிற்சங்க சம்மேளனம், அகில இலங்கை அரசாங்க எழுதுவினஞர் சங்கம், ஸ்ரீ லங்கா அரசாங்க ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், ஸ்ரீ லங்கா சுதந்திர தொழிற் சங்க சம்மேளனம், ஸ்ரீ லங்கா ஜாதிக்க குரு சங்கமய மற்றும் தொழில்நுட்ப சேவைகள் தொழிற்சங்க சம்மேளனம் ஆகிய சங்கங்களே கூட்டுத் தொழிற் சங்கப் பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த நகல் சட்டமானது எதிர்க்கக்கூடிய வேறு அம்சங்களுடன் பின்வரும் நோக்கங்களுக்காகத் திட்டமிடப்பட்டதென கைச்சாத்திட்ட தொழிற்சங்கங்கள் ஏகமனதாகக் கருதுவதாக கூட்டுப்பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. கீழ் குறிப்பிட்டுள்ள செயல்களின் மூலம் இலங்கையிலுள்ள ஊழியர்களின் அடிப்படை வேலைநிறுத்த உரிமையை நசுக்குவதற்காக:

(அ) எந்த நேரத்திலாவது வேலைநிறுத்தமொன்று ஆரம்பமாகுமுன் அல்லது ஆரம்பமாகியபின் ஜனுதிபதியால் வர்த்தமானியில் வெறும் கட்டளை ஒன்றை வெளியிடுவதன் மூலம், ''அத்தியாவசிய சேவை'' எனப் பிரகடனபடுத்தக் கூடிய எச்சேவையிலாது வேலைநிறுத்தம் செய்வதை சட்டவிரோதமாக்குதல்.

(ஆ) தொழில் அமைச்சரின் கட்டளைகளுக்கிணங்க ஊழியர் சபைகள் என்று சொல்லப்படுபவைகள் அமைக்கப்படவுள்ள ஸ்தாபனங்கள் அனைத்திலும் தொழிற்தகராறுகளைத் தீர்ப்பதற்கு கட்டாய முறையொன்றை உருவாக்குவதன் மூலமும், அந்த முறையின் எந்தக் கட்டத்திலாவது, அல்லது அவைகள் இறுதியாகத் தீர்க்கப்பட்ட முறைபற்றியோ அல்லநு அது தொடர்பாக ஏற்பட்ட தாமதங்கள் பற்றியோ அல்லது அத்தகைய தகராறுகள் ஊழியர்கள் சபைகள் என்று சொல்லப்படுபவைகளுக்கும் தொழில் வழங்குவோருக்குமிடையே அல்லது அமைக்கப்படவுள்ள சமரச மேற்படுத்தும் குழுக்கள் என்று சொல்லப்படுபவைகளால் இறுதியாகத் தீர்ப்பது பற்றி, ஊழியர்கள் எவ்வாறு எதிர்த்தாலும்கூட அவர்கள் வேலைநிறுத்தம்செய்வதை சட்டவிரோதமாக்குதல்.

(இ) ஊழியர்களின் சம்மதமில்லாமலிருப்பினும், தொழில் அமைச்சரினுல் தொழில் தகராறு ஒன்று ஒரு மத்தியஸ்தருக்கோ, தொழிற்கோட்டுக்கோ அல்லது தொழில்முறை மன்றத்திற்கோ [illegible] படுத்தப்பட்டபின் அல்லது எந்தவொரு கூட்டுடன்படிக்கையின் நியதி நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை அல்லது தீர்ப்பை, அல்லது கைத்தொழில் தகராறுகள் சட்ட ஏற்பாடுகளுக்கிணங்க தொழில் முறை மன்றத்தின் கட்டளை அல்லது தொழிற் கோட்டின் தீர்ப்பை மாற்றும் நோக்கத்துடன் அந்த ஸ்தாபனத்தில் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்வதை சட்டவிரோதமாக்குதல்.

(ஈ) வேலைநிறுத்தம் ஆரம்பிக்கும் நாளிலிருந்து 21 நாட்களுக்குக் குறையாமலும் 30 நாட்களுக்கு மேற்படாமலும் வேலை நிறுத்தம் செய்யும் எண்ணத்தை ஊழியர்களாலோ அல்லது அவர்களது தொழிற்சங்கங்கள் மூலமாகவோ தொழில் வழங்குவோருக்கு எழுத்துமூலம் முன் அறிவித்தல் கொடுக்கப்பட்டால் அன்றி எக்காரணத்திற்காகவும், ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்வதைச் சட்டவிரோதமாக்குதல்.

(உ) மேற் கூறப்பட்ட எவ்வழியிலாவது சட்டவிரோதமாக்கப்படக்கூடிய வேலைநிறுத்தமெவற்றிலாவது பங்குபற்றும் அல்லது உதவியளிக்கும் அல்லது உடந்தையாக இருக்கும் ஒவ்வொரு ஊழியரையும் அவ்வாறு செய்தமைக்காகத் தமது வேலையைக் கைவிட்டதாக கருதப்படும் அடிப்படையில் தாஞக வேலை நீக்கப்படுவதற்கும், அத்தகைய ஒவ்வொரு ஊழியருக்கோ அன்றி அவ்வேலைநிறுத்தத்தை நடாத்தும் அல்லது உடந்தையாக இருக்கும் தொழிற்சங்கமொன்றின் உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவருக்குமோ எதிராக வழக்குத் தொடர்வதற்கும் அவ்விடயம் தொடர்பாகச் சிறைப் படுத்தல், அல்லது அபராதம் விதித்தல் ஆகிய தண்டனைகள் பெறுவதற்கு ஆளாக்குதல்.

2. தொழில் அமைச்சரினுல், மேலே விபரிக்கப்பட்ட போலி ஊழியர்சபைகள் உருவாக்கப்படும் சகல ஸ்தாபனங்களிலும், தொழில் வழங்குவோருடன், ஊழியர்கள் கூட்டாகவோ அல்லது அவர்களின் தொழிற் சங்கங்கள் மூலமாகவோ, தொடர்பு கொள்வதற்கு அல்லது பேரம் பேசுவதற்கு இலங்கையில் உள்ள ஊழியர்களுக்குள்ள உரிமையைப் பறிப்பதற்காக.

3. ஊழியர் ஒருவரைப் பழி வாங்கும்பொருட்டு அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக வேலைநீக்கம் செய்யும்போது, நகல்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட நட்டஈட்டைக் கொடுப்பதால் மட்டுமே அவர் எவ்வளவு காலம் சேவை செய்திருப்பினும் எவ்வித காரணம் காட்டாமலும் ஒருவிதமான பரிகாரம் இல்லாமலும்அவரைவேலைநீக்கம் செய்து விலக்குவதற்கு, தொழில் வழங்குவோருக்கு அதிகாரமளிப்பதற்காக.

4. தொழில் வழங்குவோரால் நடாத்தப்பட்ட மனையக விசாரணையென்று சொல்லப்பட்ட விசாரணை முடிவின் பிரகாரம் எந்தவொரு தொழில் வழங்குவோரும், எந்தவொரு ஊழியரின் சேவையையும் நீக்குவதற்கு எடுத்த தீர்மானத்தை முடிவானதாகவும் தொழில்முறைமன்று அல்லது தொழில்தகராறுகள் சட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற மத்தியட்சர் முன்னிலையில், தொழில் வழங்குவோரின் தீர்மானம் நியாயமற்றதென்ற அடிப்படையில் அத்தீர்மானத்தை எதிர்த்து நடவடிக்கை எடுக்கமுடியாததுமாக ஆக்குவதன் மூலம், நியாயமற்ற வேலை நீக்கம் தொடர்பாக, மீண்டும் வேலைபெறுதல் உட்பட நிவாரணம் அல்லது பரிகாரம் பெறுவதற்கு தற்போது ஊழியர்களுக்குள்ள சட்ட ரீதியான உரிமையைப் பறிப்பதற்காக.

5. எந்த ஸ்தாபனத்திலாவது ஒன்ருகவோ அல்லது ஒருவரோடொருவர் பொதுவாக உடன்பட்ட நிலையிலோ, ஊழியர்களால் செய்யப்படும் எத்தகைய ஒன்று பட்ட நடவடிக்கையையும், எச்சூழ்நிலையிலும், நீதிக்கு விரோதமாக்கி, வேலை நீக்கம் செய்து அல்லது வேறு வகையில் சகலரையும், அல்லது தெரிவு செய்யப்பட்ட சிலரைமட்டும், பகுதி நேர வேலைநிறுத்தம், அல்லது ''வழமையாகச் செய்யும்வேலையைக் குறைத்தல் ஆகிய நடவடிக்கையில் பங்கு பற்றியதற்காகத் தண்டிப்பதற்குத் தொழில் வழங்குவோருக்கு அதிகாரம் வழங்குவதற்காக.

அப்பிரகடனத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது ;

இலங்கையிலுள்ள தொழிலாளர்களைத் தொழிலாளர்கள் என்ற வகையில், தமக்குரிய அடிப்படையுரிமைகளைப் பயன்படுத்துவதிலிருந்து தடுப்பதற்

(4ம் பக்கம் பார்க்க)

## "பட்ஜட்"

பணக்காரப் பரம்பரையைக் காக்கும் 'பட்ஜட்'
பாமரர்கள் வயிற்றிலடிக்கின்ற 'பட்ஜட்'
தனக்கேது நிகரென்று 'தர்பார்' ஆளும்
தனவந்தர் தயாரித்த தனித்த 'பட்ஜட்'
கல் போன்ற மனம் படைத்த முதலாளிக்கு
'மெல்' அவர்கள் உவந்தளித்த நன்றிப்
'பட்ஜட்'
இல்லாரை இல்லாமற் செய்யும் 'பட்ஜட்'
இழிநிலைக்கு இலங்கையரை இறக்கும்
'பட்ஜட்'

புதுயுகத்தைக் காட்டுகின்ருேம் என்று சொன்ன
புழுகர்களாம் யூ-என்-பீ புலுடா 'பட்ஜட்'
மதுமுகத்திற் கிடந்து தயாரித்த 'பட்ஜட்'
மயானத்தை ஏழைகட்குக் காட்டும் 'பட்ஜட்'
கதகதப்புக் கன்னத்தில் பவுடர் பூசும்
கறுவாக்காட்டழகிக்குப் பிடிக்கும் 'பட்ஜட்'
நிதமுழைத்துப் பிழைத்துண்ணும் மங்கையர்க்கு
நெருப்பையள்ளிக்கொட்டுமுயிர் குடிக்கும்
'பட்ஜட்'

மனிதனுக்கு எட்டுருத்தல் தருவோமென்று
மார்தட்டிப் பேசியவர் என்ன தந்தார்
மனிதரையே வெட்டுதற்கு 'பட்ஜட்' செய்தார்
மறுத்தாரை எட்டிநின்று சிரிக்கச் சொன்ஞர்
சரிதங்கள் பலபடைத்த யூ-என்-பீயின்
சரித்திரத்தில் உழைப்போரைக்
கொன்றதல்லால்
புனிதசெயல் எது செய்தார்? சிந்திப்பீரோ!
புதிய 'பட்ஜட்' தந்தோரை நிந்திப்பீர்கள்.


''திருக்கோணமலைக்கவிராயர்''

திருக்கடலூர்
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளையறிக்கையை எதிர்த்து மறியல் போராட்டம்!

* தொழிலாளர்களை அடிமைப்படுத்தும் நகல் சட்டம் ஒழிக!
* தொழிற்சங்க உரிமைகள் மீது கை போடாதே!
* வேலைநிறுத்த உரிமைகளைப் பறிக்காதே!
* போலி ஊழியர் சபை எமக்கு வேண்டாம்!



அற்கென் ஸ்பென்ஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த சி.எம்.யு. அங்கத்தவர்கள் கோட்டையிலுள்ள லேயோட்ஸ் கட்டிடத்திற்கு முன்னால்.

தொழிலுறவுகள் தொடர்பான வெள்ளையறிக்கையிலடங்கிய தொழிலாள வர்க்க விரோத யோசனைகளுக்கெதிராக 1978 மார்ச் 2ந் திகதி ஆரம்பிக்கப்பட்ட அமைப்பான மறியல் இயக்கத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு கூட்டுத் தொழிற் சங்க நடவடிக்கை குழுவினால் 1978 மார்ச் 15ந் திகதி மதிய போசன இடைவேளைக்கு முன் ஒருமணித்தியால வேலை நிறுத்தம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை சி. எம். யு. கிளைகள் சக்தியான முறையில் செயல்படுத்தின. கூட்டுத் தொழிற்சங்க நடவடிக்கைக் குழுவிலுள்ள சில தொழிற் சங்கங்களின் பல அங்கத்தவர்கள் மறியல் நடவடிக்கையில் பங்குபற்றினாலும் வேலை நிறுத்தத்தில் அச்சங்கங்கள் பங்குபற்றவில்லை.

மறியல் நடவடிக்கையின்போது பொலிஸாரின் தலையீடு வெற்றிகரமாக எதிர்க்கப்பட்டது. சில அரச கூட்டுத்தாபனங்களிலும், அரசாங்க காரியாலயங்களிலும் மறியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தோரைப் பயமுறுத்தும் முயற்சியில் ஆயுதம் தாங்கிய குண்டர் கூட்டங்களும் பின்னர் பயன்படுத்தப்பட்டன.

## பொலீஸ் தலையீட்டுக்கு ஆட்சேபனை

1978 மார்ச் 2ந் திகதி முதல் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கமுட்பட பல தொழிற்சங்க ஸ்தாபனங்கள் வேலைத்தலங்களுக்கு முன்னால் கூட்டாக நடத்திய மதிய நேர இடைவேளை மறியல் நடவடிக்கையில் பொலீஸார் தலையிட்டது தொடர்பாக பிரதி பொலீஸ் மா அதிபர் திரு. ஏ. ஸி. லோரன்ஸ் அவர்களுக்கு தொலைபேசியில் ஆட்சேபம் தெரிவித்ததை உறுதிப்படுத்தி சங்கத்தின் பொதுச்செயலாளர் கடிதம் எழுதினார்.

மார்ச் 12ந் திகதி பத்திரிகைகளில் பெயர் குறிப்பிடாத அதிகாரபூர்வமான ''போலீஸ் பேச்சாளர்'' ஒருவரிடமிருந்து பெறப்பட்டதாக வெளிவந்த அறிவித்தல்களைக் குறிப்பிட்டே 1978 மார்ச் 14ந் திகதி இக்கடிதம் எழுதப்பட்டது.

கடிதத்தில் கூறப்பட்டிருந்ததாவது:

''இம்மாதிரியான அறிவித்தல்கள்பொலீஸைப் பொறுத்தவரை அவர்களாலேயே செய்யப்பட்டதாகத் தோற்றுவதால் எனது எதிர்ப்பை நான் உறுதிப்படுத்துகின்றேன். தங்களுக்கு நான் சுட்டிக்காட்டியபடி தொழிலமைச்சினால் 1978 ஜனவரி 31ந் திகதி வெளியிடப்பட்ட தொழிலாள வர்க்க விரோத யோசனைகளடங்கிய தொழிலுறவு வெள்ளையறிக்கைக்கெதிரான மறியல் இயக்கத்திற்கெதிராக அல்லது மறியல் நடவடிக்கைக்காரர்களுக்கெதிராக மறியல் நடவடிக்கையைஆரம்பிப்பதற்கு பொலீஸார் தூண்டிவிட எத்தனிப்பது போலக் காணப்படுகிறது.

எமது அங்கத்தவர்களும் வேறு தொழிற்சங்க அங்கத்தவர்களும் மறியல் நடவடிக்கையில் ஈடுபடக்கூடிய ஏதாவது வேலைத்தலத்தில் அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதால் அமைதிக்கு பங்கம் ஏற்படுவதற்கு சாத்தியமாகலாம். இதைப் பயன்படுத்தி ''அமைதிக்கு பங்கமேற்பட வழிவகுக்கும்'' என்ற சாட்டில் மறியல் நடவடிக்கையை தடை செய்வதற்கு பொலீஸாருக்கு வாய்ப்பு உண்டாகும். இதே சொற்பதமே மறியல் நடவடிக்கையை குற்றச் செயலாக்குவதற்கு தொழிலுறவுகள் தொடர்பான வெள்ளையறிக்கையில் வெளியிடப்பட்ட நகல் சட்டத்தில் பாவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல்கள்களின் உள்நோக்கம் ஒருபுறமிருக்க, பல சந்தர்ப்பங்களில் மார்ச் 2ம் 3ம் திகதிகளில் மறியல் நடவடிக்கைக்கெதிராக பொலீஸார் சட்டவிரோதமாகத் தலையிட்டு மறியல் நடவடிக்கையிலீடுபட்டிருந்த சிலர் வைத்திருந்த சுலோக அட்டைகளைப் பலாத்காரமாக அப்புறப்படுத்தியதோடு அவர்களில் சிலரைக் கைது செய்துள்ள சம்பவங்கள் அவை முறையற்ற நோக்கமுடையன என்பதை எடுத்துக் காட்டுகின்றன. தங்களுக்கும் பொலீஸ் மா அதிபரின் பிரத்தியேக உதவியாளருக்கும் எனது ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு சில நாட்களின் பின் எமது சங்க அல்லது வேறு சங்க அங்கத்தவர்களிடமிருந்து எடுக்கப்பட்ட அடையாள அட்டைகள் கோரப்படும்போது திருப்பிக் கையளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைதியான மறியல் நடவடிக்கையில் இனி பொலீஸார் தலையிடமாட்டார்கள் எனவும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. காலங் கடந்திருந்தாலும் வரவேற்கத் தக்க இந்த உறுதி அளிக்கப்பட்ட பின்னர் தான் மேலே கூறப்பட்ட அறிவித்தல்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன. எமது சங்க அங்கத்தவர்கள் அல்லது வேறு ஆட்கள் அமைதியான முறையில் மறியல் நடவடிக்கை செய்வதைச் சிரமமாக்குவதற்காக பின்னணியிலிருந்து ''மறியல் நடவடிக்கைக் கெதிராக'' பொலீஸார் தூண்டிவிடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இதனால் உண்டாகியது.

## தமிழ்பிரதிகள் இல்லாமைக்கு சங்கத்தின் எதிர்ப்பு

தொழிலுறவுகள் பற்றிய வெள்ளையறிக்கையின் தமிழ் பிரதிகள் இல்லாமை குறித்து அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தீர்மானமொன்று 1978 பெப்ரவரி 15ந் திகதி நடந்த இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

வெள்ளையறிக்கையில் அடங்கிய யோசனைகள் பற்றி தொழிற் சங்கங்கள், தொழில் வழங்குவோர்களின் ஸ்தாபனங்கள் மற்றும் அக்கறை கொண்டோர் ஆகியோரின் கருத்துக்களை 1978 மார்ச் 15ந் திகதிக்கு முன் தொழிலமைச்சர் கோரியிருந்தார்.

இவ்விடயம் பற்றிப் பொதுச் செயலாளர் உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்:

''தொழிலுறவுகள் பற்றிய வெள்ளையறிக்கை மீது மார்ச் 15ந் திகதிக்கு முன் கருத்துக்கள் கோரப்பட்டிருந்தும் கூட அந்த வெள்ளையறிக்கை என்று சொல்லப்பட்டதின் விளைவுகளைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.''

இது தொடர்பாக அமைச்சரவை உப குழுவின் செயலாளர் திரு. ஆர். தியாகராஜா அவர்களுக்கு சங்கம் எழுதிய கடிதத்தில், வெள்ளையறிக்கை தமிழில் அச்சிடப்படாமை குறித்து பொதுச் சபையின் தீர்மானத்திற் கிணங்க எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருந்ததாவது:

''இது மிகவும் பாரதூரமான தவறென நாம் கருதுவதோடு இதனால் தமிழ் மொழி தவிர்ந்த வேறு மொழி தெரியாத தொழிற் சங்கம் அல்லது வேறு எவராவது கேட்டுக் கொண்டவாறு தமது கருத்துக்களை வெளியிடுவதிலிருந்து தடுக்கப்படலாம்''.

வெள்ளையறிக்கையிலடங்கிய விடயங்கள் குறித்து கருத்துக்கள் தெரிவிப்பதற்கு மார்ச் 15ந் திகதிவரைதான் அவகாசம் வழங்கப்பட்டிருந்தும் அவ்வறிக்கையின் தமிழ் பிரதிகள் மார்ச் 23ந் திகதியே வெளியீட்டுத் திணைக்களத்தில் கிடைக்கூடியதாக இருந்தது.

## கண்டனக் கூட்டம்

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்களுக்குக் கண்டனம் தெரிவித்தும் அவர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தும் பகிரங்கக் கூட்டமொன்றை எதிர்வரும் ஏப்ரல் 20ந் திகதி ஹைட்பார்க்கில் நடத்துவதற்கு கூட்டுத் தொழிற் சங்க நடவடிக்கைக் குழு தீர்மானித்துள்ளது.

மத்திய வங்கி ஊழியர்கள் வங்கிக் கட்டிடத்திற்கு முன்னால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாச நிறுவனத்து ஊழியர்களை குண்டர் கூட்டம் தாக்கியது!

**பச்சை சட்டை அணிந்திருந்த கோஷ்டியொன்று உட்பட ஒழுங்கமைந்த குண்டர் கூட்டத்திஞல் கடந்த ஜனவரி 17ந் திகதி காலையிலும் மாலையிலும் களனியிலுள்ள தாச நிறுவனத்தின் ஊழியர்களான சில ஆண்களும் பெண்களும் தாக்கப்பட்டனர்.**

சம்பவம் நடைபெற்ற தினம் காலையில் தாக்குதல் ஆரம்பிக்கப்படுவதற்குச் சிறிது நேரத்திற்கு முன் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கைத்தொழில் அமைச்சரும் தேசிய அரசுப் பேரவையின் களனித் தொகுதி உறுப்பினருமான சிறில் மத்தியூவும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தேசிய அரசுப் பேரவையின் மஹரகம தொகுதி உறுப்பினரான பிரேமரத்ன குணசேகரவும் தாக்குதல் நடைபெற்ற இடத்தில் குழுமியிருந்த குண்டர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்களென்று தெரிகிறது.

தாக்குதல்பற்றிய சம்பூரண விபரத்தை மார்ச் 1ந் திகதி ஹைட்பார்க்கில் நடந்த இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொது அங்கத்தவர் கூட்டத்தில் தோழர் பாலா உரையாற்றியபோது பின்வருமாறு கூறினர்.

''ஜூலை 21ல் பொதுத்தேர்தல் நடைபெற்றதன் பின் தாச நிறுவனத்து தொழிலாளர் அனைவரையும் தேசிய தொழிலாளர் சங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சேரவைத்தது. இச்சங்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டில் இயங்குவது. இத்தொழிலாளர்களில் 1500க்கு அதிகமானேர் பெண்களாவர். இவ்வாறு சகல தொழிலாளர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற் சங்கத்தில் சேருவதைப் பகிரங்கப்படுத்துவதற்காக தொழிற்சாலையின் எதிரே ஐக்கிய தேசியக் கட்சி ஆடம்பரமான கொண்டாட்ட மொன்றை நடத்தியது. ஆனல் ஒரு சில மாதங்களுக்குள்ளேயே ஐக்கிய தேசியக் கட்சியின் இத்தொழிற் சங்கம் தொழிலாளர்களுக்கு ஏற்ற உண்மையான தொழிற் சங்கமல்ல என்பதைத் தொழிலாளர்கள் அறிந்து கொண்டார்கள்.

இந்நிலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற் சங்கத்தில் தொழிலாளர்களைச் சேர்ப்பதற்கு மூலகாரணமாக இருந்த மின்னியல் ஆண் தொழிலாளர் 27 பேர் தமது உத்தரவாத மாதச் சம்பளம் பற்றி தாச முதலாளியுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை செய்வதற்குத் தீர்மானித்தனர். தாச முதலாளியோ பல்வேறு நொண்டிச் சாட்டுகளைக் கூறி இப்பிரச்சினை பற்றி அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதைத் தவிர்த்துக் கொண்டார். தேசிய தொழிலாளர் சங்கத்தின் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இத்தொழிலாளர்கள் முயன்று தோல்வி கண்டனர். எனவே தமது கோரிக்கைகளை நிர்வாகம் தீர்த்து வைக்காவிட்டால் தாம் வேலைக்கு வருவதில்லையென தை மாதம் 11ந் திகதி இவர்கள் கூறினர்கள். இத்தொழிலாளர்களைத் தொழிற்சாலைக்குள் பிரவேசிக்க அனுமதிக்கக் கூடாதென்று உடனடியாக வாசலில் கடமை புரிந்த காவலாளருக்கு உத்தரவிடப்பட்டதாக இத்தொழிலாளர்கள் மூலம் நாம் அறிந்தோம். இவ்வுத்தரவின் பிரகாரம் தொழிற்சாலை வளவிற்குள் இத்தொழிலாளர்கள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. இதையடுத்து ஆச்சரியத்துக்குரிய விடயமொன்று அங்கே நிகழ்ந்தது.'' வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக 1500க்கும் மேற்பட்ட இளம் பெண்களுட்பட்ட தொழிற்சாலையினுள் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர் அனைவரும் உடனடியாக வேலை நிறுத்தம் செய்தனர். இந்நடவடிக்கையைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட 27 தொழிலாளர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நிர்வாகம் தற்காலிகமாக இணங்கிக் கொண்டதையடுத்து தொழிலாளர்கள் மீண்டும் வேலை செய்ய ஆரம்பித்தனர்.

இதையடுத்து தைப் பொங்கல் விடுமுறையை அடுத்த நாளில் இந்த 27 மின்னியல் தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து மேலும் அதிகமான தொழிலாளர்களுடன் எமது இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்திற்கு வந்து ''இந்த தேசிய தொழிலாளர் சங்கம் எமக்கு வேண்டாம் — நாம் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் சேர விரும்புகிறோம்'' என்று கூறினர்கள்.

''தாச தொழிற்சாலையில் வேலை செய்யும் நீங்கள் சி.எம். யூ. வில் சேர்ந்தால் மலிபன் தொழிலாளர்களைப் போல் நீங்களும் பழிவாங்கப்படலாமென நான் அவர்களுக்குக் கூறினேன். இதற்கு முன் ஆட்சி புரிந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கீழ் எமது சங்கத்தில் சேர்ந்த 500க்கு மேற்பட்ட மலிபன் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதையும், தொழிற் கோட்டிலும் மேல் நீதிமன்றத்திலும் திரும்பவும் தொழிற் கோட்டிலுமாக எட்டு வருடங்களாக நாம் போராடி வெற்றி கண்டு வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளருக்கு 15 இலட்சம் ரூபாயை நஷ்ட ஈடாகப் பெற்றுக் கொடுத்ததையும் உங்களில் பலர் அறிந்திருப்பீர்கள். எனவே தான் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் சேருவதற்கு முன்னர் நன்ருகச் சிந்திக்குமாறு தாச தொழிற்சாலை ஊழியர்களை நான் எச்சரிக்கை செய்தேன். போய் இதுபற்றி நன்ருகச் சிந்தித்த பின் வந்து எமது சங்கத்தில் சேரலாமென நான் கூறினேன். ஆனல் அவர்களோ தாங்கள் முன்னரே எல்லாவற்றையும் சிந்தித்து முடிவு செய்ததாகவும், இப்பொழுதே சேரவேண்டுமெனவும் கூறினர்.

''எமது சங்கத்தில் சேருவது திருமணம் செய்வது போலாகுமெனவும், அதை நீங்கள் விளையாட்டுக்குரிய விடயமாக நினைத்தாலும் அது சிந்தனைக்குரிய விடயமாகுமெனவும் அது மட்டுமல்லாது அவசரப்பட்டு திருமணம் செய்துவிட்டுப் பின்னர் வருந்துவது நல்லதல்லவெனவும் எமது சங்கம் தீவிரமானதொரு சங்கமெனவும் கூறினேன். அதற்கு அவர்கள், இதனை நன்கு உணர்ந்தே தாங்கள் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் சேர விரும்புவதாகக் கூறினர்கள். அன்றைய தினமே 100க்கணக்கானவர்கள் எமது சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொண்டனர்.

துரதிருஸ்டவசமாக இக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சங்கத்திற்குச் சார்பான சில ஒற்றர்களும் இருந்தனர். எமது கிளையின் செயற் குழுவிற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களையெல்லாம் இந்த ஒற்றர்கள் அவதானித்து எமது சங்கத்தின் எதிரிகளுக்கு தகவல் கொடுத்துவிட்டனர்.

''தைப்பொங்கலுக்கு அடுத்த தினமாகிய செவ்வாயன்று முதலில் கதவடைப்புச் செய்யப்பட்ட அந்த 27 தொழிலாளர்களும் தொழிற்சாலைக்கு வெளியே நின்றுகொண்டிருந்த போது 200க்கும் 300க்கு மிடைப்பட்ட பச்சை சேர்ட்காரர்கள் அவர்களைப் போய் தாக்கி உள்ளனர். தொழிற்சாலைக்கு எதிரே பொலீஸார் பிரசன்னமாக இருந்தும் கூட ஒரு பச்சை சேட் காரராவது கைது செய்யப்படவில்லை.

(6ம் பக்கம் பார்க்க)

## —ஹைட்பார்க் தீர்மானம்—

1978 மார்ச் 1ந் திகதி கொழும்பு ஹைட்பார்க்கில் நடைபெறும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் இப் பொது அங்கத்தவர் கூட்டம்,

தொழிற் சங்கங்கள் மூலமாக அல்லது வேறுவகையில் தொழில்தருநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி கூட்டுடன்படிக்கை ஏற்படுத்துதற்கும் அல்லது வேலைநிறுத்தம் அல்லது வேறுவகையான கூட்டு நடவடிக்கை எடுப்பதற்கும் இலங்கையிலுள்ள தொழிலாளர்களின் உரிமைக்கு முற்றுப் புள்ளியிட்டு, உள்நாட்டு வெளிநாட்டு மூலதனத்தின் நலன் கருதி சகல ஸ்தாபனங்களிலும் தொழிலாளர்களை தொழில்தருநர்களின் சம்பூரண சர்வாதிகாரத்தின் கீழ் வைப்பதற்காக, தொழிலுறவுகள் பற்றிய வெள்ளையறிக்கையென்று அமைச்சரவை உப குழுவினல் தயாரிக்கப்பட்டு 1978 ஜனவரி 31ந் திகதி தொழிலமைச்சினல் வெளியிடப்பட்ட நகல் சட்டம் திட்டமிடப்பட்டுள்ளதென அதனைப் பகிரங்கமாகக் கண்டிக்கும் சங்கப் பொதுச் சபையின் 1978 பெப்ரவரி 15ந் திகதிய

**தீர்மானத்தை அங்கீகரித்து**

*வெள்ளையறிக்கையிலடங்கியுள்ள தொழிலாள வர்க்க விரோத யோசனைகள் அமூலாக்கப்படுவதை பொது வேலைநிறுத்தம உட்பட இயலுமான சகல வழிகளாலும் எதிர்ப்பதற்கும்,*

*அவ்வாறே போராடுவதற்கு தயாராயுள்ள தொழிலாள வர்க்கத்தின் ஏனைய சகல பகுதிகளுடனும் இணைவதற்கும்,*

*தொழிலாள வர்க்கத்தின சர்வதேசிய ஸ்தாபனங்களையும் மற்றைய நாடுகளிலுள்ள தொழிலாளர் ஸ்தாபனங்களையும் ஆதரவளிக்கக்கோருவதற்கும்,*

**பொதுச் சபை தீர்மானித்ததை உறுதிப்படுத்தி**

சங்கத்தின் பொதுச் சபையையும் நிறைவேற்று சபையையும் இதற்கு இணங்க தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு,

**உறுதியுடன் தீர்மானிக்கிறது.**

## கூட்டுத்....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கும், வெளிநாட்டு, உள்நாட்டு மூலதனத்தின் நலனுக்காக அவர்களை மிகவும் கொடூரமான முறையில் சுரண்டுவதற்கு வசதியை ஏற்படுத்தவும் அவர்களின் தொழிலுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் செய்வதுமே இந்த நகல் சட்டத்தின் உண்மையான நோக்கமாகும் என்று நாம் பிரகடனப்படுத்துகின்ருேம்.

பின்வரும் உரிமைகள் உட்பட இலங்கையிலுள்ள தொழிலாளர்கள் தற்போது அனுபவித்துவரும் உரிமைகளை எந்த வகையிலும் நசுக்குவதையோ, அல்லது கட்டுப்படுத்துவதையோ நாம் ஒன்றுபட்டு எதிர்ப்போம் என்பதை நாம் மேலும் பிரகடனப்படுத்துகின்ருேம்..

1. தனிப்பட்ட தொழில் வழங்குவோருடனே, அல்லது தொழில் வழங்குவோர் குழுக்களுடனே தொழிற் சங்கங்கள் மூலமாக கூட்டாகப் பேரம் பேசி நன்மை பெறுதல் அல்லது கூட்டுடன் படிக்கை ஏற்படுத்தல்.
2. தாம் பொருத்தமெனக் கருதும் வகையில் தமது நலன்களை வலியுறுத்தி வேலைநிறுத்தம் செய்தல் அல்லது வேறு ஏதேனும் கூட்டு நடவடிக்கை எடுத்தல்.
3. வேலை நிறுத்தம் சம்பந்தமாக கூட்டங்களில் அல்லது வேலை மறியலில் பங்குபற்றுதல் உட்பட, தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடுதல்
4. நியாயமற்ற வேலை நீக்கத்திற்கெதிராக, மீண்டும்வேலைபெறுதல், உட்பட நிவாரணம் பெறுவதற்கு தொழில்முறை மன்றுகளில் அல்லது மத்தியட்சர்கள் மூலம் நீதிபெற முயலல்.

## சர்வ தேசிய.....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளில் தொழிலாளர்களைச் சுரண்டுகின்றனர்.''

ஜப்பானிலிருந்து வருகை தந்திருந்த புடவை தொழிலாளர் ஆசிய பிராந்திய ஸ்தாபனத்தின் செயலாளர் ஈகோ இகஸாகி பொதுச் சபையில் உரையாற்றியபோது, தான் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளரை டோகியோ விமான நிலையத்தில் கடந்த வருடத்தில் தற்செயலாகச் சந்தித்ததாகவும் அப்போது இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தைப் பற்றிய முழு விபரங்களையும் பொதுச் செயலாளத் தோழரிடமிருந்து அறிந்துகொள்ள முடிந்தது என்றும் கூறினர். இம்முறை இலங்கைக்கு வந்த போது இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச் சபையில் உரையாற்றுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு தான் விசேடமாகப் பெருமையடைவதாகவும் அவர் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீஜிதீவில் நிறைவேறிய கண்டனத் தீர்மானம்

இலங்கை தொழிற் சங்கங்களை அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்து தொழிலாள வர்க்கத்தின் அமைப்பாகும் சுதந்திரத்தைப் பறிப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளைக் கண்டிப்பதாக சில நாட்களுக்கு முன் பீஜி தீவில் சூவா என்னுமிடத்தில் நடந்த உணவும் அதனோடிணைந்த உற்பத்தி தொழிலாளர்களின் சர்வதேசிய சங்கத்தின் 4வது ஆசிய, பஸிபிக் பிராந்திய மகாநாட்டில் தீர்மானமொன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இலங்கையிலிருந்து அம் மகாநாட்டுக்குச் சென்றிருந்த இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் பாலா தம்பு இந்தப் பிரேரணையை ஆமோதித்துள்ளார். நியூஸிலாந்துப் பிரதிநிதி தோழர் கென் கிளென்டெனிக் அவர்களே இப் பிரேரணையை முன்மொழிந்திருந்தார்.

அரச கூட்டுத்தாபன, வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பேர்ஸி விக்ரமசேகர மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி ஆகிய தோழர்களும் இலங்கையிலிருந்து மேற்கூறப்பட்ட மகாநாட்டுக்குச் சமூகமளித்தனர்.

ஆசிய பஸிபிக் பிராந்தியத்தின் ஆசியப் பிரதிநிதியாக தோழர் பாலா தம்பு இம் மகாநாட்டில் ஏகமனதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முழு வாசகமும் பின்வருமாறு:-

''இப் பிராந்தியத்தைச் சேர்ந்த சில நாடுகளில் தொழிலாளர் விரோத சட்டங்கள் கொண்டுவரப்படுவதையும், அதேவேளையில் வேறு நாடுகளில் ஏற்கனவே நடை முறையிலுள்ள இத்தகைய சட்டங்கள் தீவிரமாக அமுலாக்கப்படுவதையும் இம்மகாநாடு எச்சரிக்கையுடன் அவதானிக்கிறது. மேற் கூறிய நிலைமை உருவாகுவதை இம் மகாநாடு கண்டிக்கிறது. தேசிய, சர்வதேசிய ஸ்தாபனங்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடியினுல் ஏற்படும் தாக்கல்களிலிருந்து நஸ்டபயமின்றித் தப்பிக்கொள்ளும் வகையில் அவற்றை தொழிலாள வர்க்கத்தின்மீது சுமத்துவதற்காக தொழிற் சங்கங்களை நடைப்பிணங்களாக்க எத்தனிக்கிறர்கள் இந்நோக்கத்திற்காக தொழிற் சாலைகளை மூடுதல், உற்பத்தியைக் குறைத்தல், வேலை நேரத்தைக் குறைத்தல் மற்றும் வேலையில்லாத் திண்டாட்டமும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளென்று கூறப்படும் நாடுகளுக்கு குறைந்த சம்பளத்தோடு கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட தொழிலாளர்களைப் பெறுவதற்கு உதவியளித்தலும் போன்ற நடவடிக்கைகளைக் கையாளுகிறர்கள்.

மேலும் ஜனநாயக உரிமைகளுடன்-பொதுவாக மனித உரிமைகளுடன் பிரிக்கமுடியாத வகையில் சரித்திர ரீதியாகப் பிணைக்கப்பட்டிருக்கும் தொழிற் சங்க உரிமைகளிலும், மக்களின் ஒன்றுகூடும் சுதந்திரத்திலும் தலையிடுவது ஜனநாயகத்திற்கே எதிராக பொதுப் படையான பயமுறுத்தல்கள் ஏற்படவுள்ளதையே இம் மகாநாடு கவனத்திற்கு எடுத்துள்ளது.

ஆதலினுல் பின்வருவனவற்றுக்கெதிராக இம் மகாநாடு உறுதியுடன் அதன் முழு எதிர்ப்பையும் தெரிவிக்கிறது.

தொழிற் சங்கங்களை அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான வெறும் சாதனங்களாக இப் பிராந்தியத்தை சேர்ந்தநாடுகள் சில வற்றில் (இலங்கை) ஆலோசிக்கப்பட்டும் (இந்தோனேஸியா) தற்போது திணிக்கப்பட்டும் வருவதைப்போன்ற போலியான தொழிற் சங்க ஒருங்கிணைப்பு திட்டங்கள்.

பொதுக் குடியியல் சுதந்திரங்களுக்கு (தொலைபேசி ஒற்றுக் கேட்டல் மற்றும் தபாற்றணிக்கை போன்றவற்றுல் பிரத்தியேக சுதந்திரம் பறிபடல்) ஆஸ்திரேலியாவிலும் நியூசிலாந்திலுமுள்ள பிரேஸர் மற்றும் மல்டூன் அரசாங்கங்களினுல் தொழிற் சங்க இயக்கத்தை முடமாக்கும் நோக்குடன் கொண்டு வரப்பட்ட அடக்குமுறைச் சட்டங்கள்.

இம் மகாநாடு மேலும் கோருவதாவது:-

சீனி உற்பத்தியிலீடுபடும் தொழிலாளர்களின் உரிமையை மீண்டும் வழங்க வேண்டுமென்ற சங்கத்தின் கோரிக்கையை மீண்டும் உறுதிப் படுத்துவதுடன், இந்நாட்டில் சிறைப்படுத்தப்பட்டுள்ள தொழிற்சங்க உத்தியோகத்தர்களை விடுதலை செய்யவேண்டும்.

மலேஸியாவில் கைத்தொழில் தகராறுகள் திட்டவட்டமாகத் தீர்க்கப்படுவதை உறுதிப்படுத்த அங்கு நடைமுறையிலுள்ள கைத்தொழில் தகராறு தொடர்பான விசாரணை நீதித்துறை மற்றும் மத்தியட்ச விசாரணை முறைகள் முற்றிலும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

ஜப்பானில், குறிப்பாக, அரசு தனியுரிமை கொண்டுள்ள புகையிலை வர்த்தகத்தில் தொழில்புரியும் பொது ஊழியர்களின் வேலைநிறுத்த உரிமை மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும்.

தொழிற் சங்க உரிமைகள் மற்றும் ஜனநாயக உரிமைகள் பற்றி கல்வி புகட்டும் இயக்கமொன்றை நடாத்துவதற்கு வசதிபடைத்த ஸ்தாபனங்கள் ஆசிய, பஸிபிக் பிராந்தியம் முழுவதிலும் ''தொழிற் சங்க உரிமைகள் வாரம்'' ஒன்றைப் பிரகடனம் செய்ய வேண்டும்.

# சர்வ தேசிய தொழிற் சங்கப் பிரதிநிதிகள் ஆதரவு தெரிவித்தனர்

ஸ்ரீ லங்கா மன்றக் கல்லூரியினுல் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வ தேசிய தொழிற் சங்கப் பிரதிநிதிகள் மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த சிலர் கடந்த வருடம் டிசம்பர் 1ந் திகதி நடந்த இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டார்கள்.

பொதுச் சபையில் உரையாற்றும் போது, சர்வ தேசிய புடவை, உடை மற்றும் தோல் தொழிலாளர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் சால்ஸ் போர்ட், தொழிற் சங்க இயக்கத்தை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு இலங்கை அரசாங்கம் செய்யும் முயசிற்களுக்கெதிராக இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்குத் தாம் ஆதரவளிக்கத் தயாராகவுள்ளதாகத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது :

''இலங்கை தொழிலாள வர்க்கம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றி எமது சங்கம் அவதானித்து வருகிறது. தொழிற் சங்கத்தை முதலாளிகளும், ஆட்சியாளரும் அங்கீகரிப்பதற்காக எமது சங்கம் போராட வேண்டியேற்பட்டது. பாட்டா நிறுவனத்தில் பணிபுரியும் ஆஸ்திரேலிய தொழிலாளர் பெறும் சம்பளத்தை பார்க்கும் போது அதே நிறுவனத்தின் கீழ் வேலை செய்யும் ஆசிய ஊழியர்களுக்கு அச்சம்பளத்தின் நூற்றுக்கு மூன்று வீதமே கிடைக்கிறது. அவ்வாறே பல வகைப்பட்ட தேசிய ஸ்தாபனங்கள் அபிவிருத்தியடையாத

(4ம் பக்கம் பார்க்க)

## பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்திலுள்ள இலங்கை வர்த்தக ஊழியர் சங்கக் கிளைகளின் பத்தாண்டு நிறைவையொட்டி இவ்வருடம் ஜனவரி 26ந் திகதி பரந்தனில் நடந்த கூட்டம் தொடர்பாக சங்கத்தின் பொதுச் செயலாளர் விடுத்த ஆசிச் செய்தி

அன்பு மிக்க தோழர்களே!

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்திலுள்ள இலங்கை வர்த்தக ஊழியர் சங்கக் கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டு பத்தாண்டு நிறைவு பெறும் இவ்வேளையில், எமது சங்கத்தின் சரித்திரத்தில் மிகவும் இன்னல்கள் நிறைந்த இக்காலகட்டம் முழுவதும் அவர்களுடைய சங்க நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக நிலைநாட்டி வந்ததையிட்டு எனது வாழ்த்துக்களை முதற்கண் தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஒன்பது வருடங்களுக்கு முன்னர் நான் பரந்தன் தொழிற்சாலைக்கு விஜயம் செய்த வேளையில், எமது கிளைகள் 1969-ம் ஆண்டு நடைபெற்ற அவர்களுடைய முதலாவது பெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தனர். நான் தொழிற்சாலையுள் விஜயம் செய்தபோது, சில இளம் தொழிலாளர்கள் வழமையான வேலையில் ஈடுபட்டிருப்பதை அவதானித்தேன். அத்துடன் அவர்கள் சமயாசமய ஊழியர்களாக வேலைக்கமர்த்தப்பட்டிருப்பதால் இச்சங்கத்தின் அங்கத்தவர்களாக இல்லாமலிருப்பதாகவும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நான் எமது கிளைகளிடம், இப்படிப்பட்ட தொழிலாளர்களை உடனடியாகச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளும்படியும், முதற்படியாக அவர்களுக்கு மற்றைய நிரந்தர ஊழியர்களைப் போன்ற நிபந்தனைகளில் வேலைக்கமர்த்துவதற்காகப் போராடும்படியும் பணித்தேன். எமது கிளைகள் இவ்விடயத்தை தமது வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஒரு கோரிக்கையாக முன்வைத்து 'சமயாசமய ஊழியர்கள்' என்று சொல்லப்படுகிற இவ்வூழியர்களின் வேலை நிபந்தனைகளைப் பாதுகாப்பதில் வெற்றியும் பெற்று, இத்தொழிற்சாலையில் மேற்கொள்ளப்பட்டு வந்த மிக மோசமான அநீதிக்கு ஓர் முற்றுப் புள்ளி வைத்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது சங்கத்தையும், சகல தொழிலாள வர்க்கத்தையும் பற்றிய அதி முக்கிய நடவடிக்கைகளில் நான் தற்போது ஈடுபட்டிருப்பதனுல், எமது கிளைகளின் பத்தாண்டு நிறைவு விழாவில் பங்கு கொள்ளும் பொருட்டு பரந்தனுக்கு வர முடியாமலிருக்கின்றது. ஆயினும் இச்செய்தி வாயிலாக இக் கொண்டாட்டத்தில் பங்கேற்றும் அதே வேளையில், நேரடியாக வர இயலாமைக்காக மனவருத்தமடைகிறேன்.

ஏற்கனவே தொழிலாளர் விரோதமானதும், முற்றுன தீவிரவாத முதலாளித்துவத் தன்மைகளைக் காட்டிவரும் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் எமது மக்கள் எதிர்நோக்குகின்ற இன்னல்கள் நிறைந்ததும், பயங்கரமானதுமான காலகட்டத்தில் எமது இக்கிளைகள், மற்றும் எமது சங்கக் கிளைகளுடன் தோளோடு தோள் நின்று போராடுவார்கள் என்று நான் திடமாக நம்புகின்றேன். உளுத்துப் போன முதலாளித்துவ அமைப்பினுல் மேற்கொள்ளப்படும் மனித உரிமைகள், வாழ்க்கைத்தரம் மீதான தாக்குதல்களை அமைப்பாகவுள்ள தொழிலாள வர்க்க அணிகள், சுதந்திரமான வர்க்க ரீதியாக ஒன்றுபட்டு போராடுவதன்மூலம் மாத்திரமே, இத்தகைய அமைப்பிலிருந்து பொதுமக்கள் விடுதலை அடைவதற்கான போராட்டங்களுக்கு அவசியமான பலம் வாய்ந்த ஓர் வழியை வகுக்க முடியும். சிறுபான்மையினத்தவரின் நியாயபூர்வமான உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டங்களிலும் ஒரு சக்தி வாய்ந்த தொழிலாளவர்க்க இயக்கம் மாத்திரமே பலம் வாய்ந்ததாகவுமமையும்.

இன, மத மற்றும் வேறுபாடுகளற்ற முறையில் எமது மக்களின் விடுதலைக்கான போராட்டங்களுக்காக வலதுசாரிக் கட்சிகளிலோ மற்றும் தரகுமுறையிலமைந்துள்ள கட்சிகளிலோ தங்கியிருப்பது அவை சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லீம் தலைவர்களால் வழிநடத்தப்பட்டபோதிலும் ஒரு போதும் பலம் வாய்ந்ததொன்றுக அமையாது.

வருங்காலத்தில் எமது சங்கத்தின் இந்நோக்கங்களை வென்றெடுப்பதற்கான போராட்டங்களில் பரந்தன் இரசாயனக் கூட்டுத் தாபனத்தைச் சேர்ந்த எமது கிளைகள் முன்னணியில் திகழும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

தோழமை மிக்க,
பாலா தம்பு
பொதுக் காரியதரிசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தொழிலாளர் கோரிக்கைகளுக்கு சொஹியோ ஆதரவு

''இலங்கை அரசாங்கத்தினுல்வெளியிடப்பட்ட வெள்ளையறிக்கையிலும் அறிக்கைகளிலும் காணப்படும் அடிப்படை என்ணங்கள் சர்வதேசிய தொழிலாளர் ஸ்தாபனத்தினுல் நிலைநாட்டப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கும் ஏனைய சர்வதேசிய பிரகடனங்களுக்கும் முரணுக அமையலாமென்பதுடன் அடிப்படைத் தொழிற் சங்க உரிமைகள் மறுக்கப்படுவதற்கும் அல்லது அவற்றைப் பலத்த கட்டுப்பாட்டிற்குள்ளாக்குவதற்கும் வழி வகுக்கும்.''

இவ்வாறு ஜப்பானிய தொழிற் சங்கங்களின் பொதுச் சபை (சொஹியோ) ஸ்ரீ லங்கா குடியரசின் ஜனுதிபதி அவர்களுக்கு எழுதிய 1978 மார்ச் 8ந் திகதியிடப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளது,

கடிதத்தின் முழுவாசகமும் பின்வருமாறு:

ஐயா,

நாற்பத்தேழு இலட்சம் அங்கத்தவர்களைக் கொண்ட ஜப்பானிய தொழிற் சங்கங்களின் பொதுச் சபை (சொஹிவோ) யைச் சேர்ந்த நாம் இருபது வருடங்களுக்கு மேலாக உங்கள் நாட்டின் உழைக்கும் மக்களுடனும் தொழிற் சங்கங்களுடனும் கொண்டிருந்த நட்பையும் உறவுகளையும் பாதுகாத்துப் பலப்படுத்தியுள்ளோம். பேராளர்கள் பரிமாறுதல் மூலமாக அல்லது ஏனைய சந்தர்ப்பங்களில் ஏற்படுத்திய கருத்துப் பரிமாறுதல் மூலமாக ஒருவரையொருவர் நாம் ஆழ்ந்து புரிந்துகொண்டும் நட்பைப் பலப்படுத்தியும் உள்ளோம்.

ஆசியப் பிராந்தியத்திலுள்ள தொழிலாளர்களினதும் தொழிற் சங்கங்களினதும் பொதுப்படையான ஆவல் யாதெனில் உழைக்கும் மக்களின் வாழ்வை உயர்த்துவதும், சேவை நிபந்தனைகளை உயர்த்துவதுமேயாகும். இந்த நிலையிலிருந்து நோக்கும்போது, ஜப்பானிய மூலதனம் ஆசிய நாடுகளுக்குள் புகுவது பற்றி நாம் மிகுந்த கவலை கொண்டுள்ளோம். இப் பிராந்தியத்திற்குள் புகும் மூலதனம் இங்குள்ள மலிவான உழைப்பால் கூடுதல் இலாபமீட்டும் நோக்குடையதென்பது தெளிவாகிறது. இதனுல் ஏற்கனவே ஆசியாவின் அநேக நாடுகளில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன. இந்த ரீதியில் உங்கள் நாட்டினுள் இப்பொழுது மேலும் மேலும் ஜப்பானிய மூலதனம் வருவது பற்றி நாம் மிகவும் சிந்திக்க வேண்டியவர்களாயுள்ளோம்.

மேலும் ஜனவரி 78ல் உங்களது அரசாங்கத்தினுல் வெளியிடப்பட்ட தொழிலுறவுகள் பற்றிய வெள்ளையறிக்கையுட்பட ஏனைய அறிக்கைகளின் மூலம் தெரிந்து கொள்ளக் கூடிய தொழிலாளர் தொடர்பான உங்கள் அரசாங்கத்தின் கொள்கை பற்றியும் நாம் மிகுந்த கவலையடைகின்ருேம்.

இந்த அறிக்கைகளில் காணப்படும் அடிப்படை என்ணங்கள் சர்வதேசிய தொழிலாளர் ஸ்தாபனத்தினுல் நிலைநாட்டப்பட்ட கோட்பாடுகளுக்கும் ஏனைய சர்வதேசிய பிரகடனங்களுக்கும் முரணுக அமையலாமென்பதுடன் அடிப்படைத் தொழிற் சங்க உரிமை மறுக்கப்பட அல்லது அவற்றைப் பலத்த கட்டுப்பாட்டிற்குள்ளாக்க வழிகோலுமென்று நாம் பலத்த சந்தேகம் கொண்டுள்ளோம்.

மாண்பு மிக்கவரே,

அடிப்படை தொழிற் சங்க உரிமைகள் உத்தரவாதப் படுத்தப்படுவது அனைத்துலக ரீதியாக ஏற்றுக்கொள்ளப் பட்ட கோட்பாடு என்பதுடன் இந்த உரிமைகள் எல்லா அரசாங்கங்களினுலும் மதிக்கப் படவும் உத்தரவாதப் படுத்தப் படவும் வேண்டியவை. உங்களது அரசாங்கத்தின் கொள்கை இக் கோட்பாட்டிற்கிணங்க அமையுமென நாம் நம்புகின்ருேம்.

இலங்கை தொழிற் சங்கங்களினதும் தொழிலாளர்களினதும் வாழ்வை உயர்த்துதற்கும் சேவை நிபந்தனைகளை முன்னேற்றுவிக்கவும், தொழில் விபத்துகள் மற்றும் கைத்தொழில் கறைப்படுத்தல்கள் ஆகியவற்றுக் கெதிராகவும் அடிப்படை தொழிற் சங்க உரிமைகளை நிலை நாட்டுதற்காகவும் ஜப்பானிய தொழிலாளர்களாகிய நாமும் தொழிற் சங்கங்களும் ஆதரவளிக்கின்ருேம். அவர்களுடன் கொண்டுள்ள எமது நட்பையும் ஒற்றுமையையும் நாம் மேலும் பலப்படுத்துவோம்.

மாண்புமிக்க தாங்களும் தங்களின் அரசாங்கமும் இலங்கை ஜப்பானிய தொழிலாளர்களின் விருப்பங்களுக்கும் வேண்டுதல்களுக்கும் சிநேக பூர்வமாகச் செவிசாய்ப்பின் நாம் பெரு மகிழ்ச்சியடைவோம்.

தங்களின் உண்மைமிக்க
மொட்டோ பூமி மக்கிடா
தலைவர்

## தாச நிறுவன...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

''தாக்குதலுக்கு இலக்காகிய சிலர் எமது தலைமை அகத்திற்கு வந்து எனக்கு எழுத்து மூலமாக முறைப்பாடு ஒன்றை கையளித்தனர். பொலீஸுக்கு வாக்கு மூலம் ஒன்றை கொடுக்கும்படி அவர்களை அனுப்பினேன். இத் தாக்குதல் பற்றி பிரதி பொலீஸ் மா அதிபர் லோரன்ஸ் அவர்களுக்கும் அறிவித்தேன். அன்று மாலையில் பெண்கள் அனைவரும் வேலைவிட்டு வெளிச் செல்லும் போது திரும்பவும் தாக்குதல் நடைபெறலாமெனவும் அவர்களுக்கு நான் கூறினேன்.

எனது கூற்று பிழைக்கவில்லை. எமது கிளையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டவர் தொழிற்சாலையிலிருந்து வெளியே வந்தபோது பொலீஸார் முன்னிலையில் வைத்து தாக்கப்பட்டார். அவரும் இன்னும் இருவரும் தாக்கப்பட்ட போது பெண்கள் அனைவரும் இருவரைச் சுற்றி வளைத்துக் கொண்டு பொலீஸாரைக் கூப்பிட்டனர். பொலீஸார் செயல்படவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டு கிளைத் தலைவரையும் அவரைத் தாக்கியவர்களெனக் கூறப்பட்டவர்களையும் ஜீப்பில் ஏற்றிப் பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். உடனடியாக அவர்களுக்குப் பக்கபலமான பெரும்புள்ளிகள் அங்கு சென்று தாக்கியவர்களென்று கூறப்பட்டவர்களைப் பிணையில் விடுவித்தனர். தாக்கப்பட்ட எமது கிளைத் தலைவரிடம் பிணைப் பத்திரத்தில் கையொப்பமிடுவதற்கு யாரையாவது பார்க்கும்படி கேட்கப்பட்டது.''

இந்த சம்பவத்தை விளக்கி முடிக்கையில் ''தார்மீக சமுதாயத்தில்'' 'இப்படித்தான் பொலீஸார் செயலாற்றுகின்றனர் என்று குறிப்பிட்ட தோழர் பாலா, தாக்குதலுக்காளாகிய தாச ஊழியர்கள் சி.எம்.யூ.வை விட்டு விலகுவதில்லை என்று தீர்மானித்துள்ளதையிட்டுத் தான் பெருமையடைவதாகக் கூறினர். அத்தோடு வேலை மறுக்கப்பட்ட 27 பேரைத் தவிர ஏனையோர் வேலைக்குச் செல்வதாக அறிவித்தார். மழையையும் பொருட்படுத்தாது சங்கத்தில் சேர்ந்த தாச நிறுவனத்தில் தொழில் புரியும் தொழிலாளர்களுடன் மின்னியல் தொழிலாளர்களும் கூட்டத்தில் சமூகமளித்திருப்பதையிட்டு தான் பெருமையடைவதாகக் கூறி அவர்களை இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கிளையொன்ருக வரவேற்குமாறு பொதுச் செயலாளர் கேட்டுக் கொண்டார்.

## ஏகோபித்த....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய செய்திப் பத்திரிகைகளில் வெள்ளையறிக்கை ஆறு வாரங்களுக்கு முன் வெளியிடப்பட்டு அதைப் பற்றிய கருத்துகளைக் கூறுவதற்கு மார்ச் 15ந் திகதி வரையும் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனுல் தமிழ் பேசும் உழைக்கும் மக்களுக்கு அதை வாசித்து அறிந்து கொள்வதற்கு தமிழில் அது வெளியிடப்படவில்லை.

தமிழ் பேசும் தொழிலாளர்கள் இலட்சக் கணக்காக தோட்டங்களிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இருக்கின்ருர்கள். இந்த வெள்ளையறிக்கை சட்டமாக்கப்பட்டால் தமிழ் பேசும் தொழிலாளர்கள் உட்பட இந் நாட்டின் தொழிலாளர் அனைவரினதும் அடிப்படை உரிமைகளை அது பறித்திடும்.

எப்பொழுது தமிழ் பிரதியை தரப் போகிறீர்களென்று நான் இன்று அமைச்சு அலுவலகத்தில் கேட்டபோது அது திங்கட்கிழமை கிடைக்கக் கூடியதாக இருக்குமெனக் கூறினுர்கள். அப்படியானுல் எதுவித அறிவித்தலுமின்றி தமிழ் பேசும் சகல தொழிற் சங்கத் தலைவர்களும் தொழிலாளர்களும் தமக்கு தமிழில் பிரதி கிடைக்கப் போகின்றதென்பதை அறியவேண்டும். அவர்கள் தங்கள் அங்கத்தவர்களுக்கான பொதுக் கூட்டமொன்றை வைக்க எத்தனை நாட்கள் எடுக்கும். இதிலிருந்து அரசாங்கம் இந்நாட்டிலுள்ள அனைவரையும் சமமாகக் கணிக்கிறது என்று பேசும்போது அது பொய்யென்பதை நீங்கள் கண்டுகொள்ளலாம்.

''தொழில் வழங்குவோரால் தொழிலாளர்கள் நியாயமற்ற முறையில் வேலை நீக்கம் செய்யப்படுவதற் கெதிராக எமது சங்கம் 30 வருடங்களாகப் போராடி வருகிறது. 1957 தொடக்கம் பண்டாரநாயகாவின் முதல் அரசாங்கத்தின் கீழ் பல வேலை நிறுத்தங்களுக்குப் பின் இந்நாட்டில் தொழில் மன்றங்களை நிறுவும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்த நாள் தொட்டு 20 வருடங்களாக இருந்து வந்த இந்நாட்டுத் தொழிலாளர்களை நியாயமற்ற முறையில் தொழில் வழங்குவோர் வேலை நீக்கம் செய்யும் போது ''அதை எதிர்த்து தொழில் மன்றுக்கு விண்ணப்பிக்கும் சட்ட பூர்வமான உரிமையை இன்று இந்த நகல் சட்டத்தினுல் பறிப்பதற்கு அவர்கள் முயற்சிக்கிருர்கள்.

ஜே. ஆர். ஜயவர்தனுவுக்கு நல்ல நண்பர்கள் ஜப்பானில் இருக்கின்ருர்களென்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும். அதேபோல் ஜப்பானிய தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் சி.எம்.யு.வுக்கும் நல்ல நண்பர்கள் உண்டு. நீங்கள் தீர்மானித்தால் இந்த வெள்ளையறிக்கை பற்றி அமைப்பாகிய ஜப்பானிய தொழிலாள வர்க்கத்திற்கு நாம் அறிவித்து இப் பிரேரணைகளுக் கெதிராக நாம் ஆரம்பிக்கவுள்ள எந்தப் போராட்டத்துக்கும் எமக்கு ஆதரவு தருமாறு கேட்கலாம். இந்த அரசாங்கத்திற்கு மேற்கு ஜேர்மனி முதலாளித்துவ வாதிகள் மத்தியிலும் ஏகாதிபத்திய வாதிகள் மத்தியிலும் நல்ல நண்பர்கள் உண்டென்பது எமக்குத் தெரியும். எமது சங்கம் ஜேர்மனியிலும் சிங்கப்பூரிலுமுள்ள தொழிற் சங்கங்களுடன் இணைந்துள்ளது. அது மட்டுமல்லாது எமது சங்கம் பிரான்ஸ், சுவீடன் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர்களுடனும் இணைந்துள்ளது.

சிங்கப்பூரிலுள்ள சுதந்திர வர்த்தக வலயம் பற்றி அவர்கள் பெரிய கதை அளக்கிருர்கள். 12 வருடங்களாக கைத்தொழில் வர்த்தக வலயத்தைக் கட்டியெழுப்ப சிங்கப்பூர் முயற்சித்த பின் அண்மையில் தொழிற் சங்கத் தலைவர்களும் சிங்கப்பூர் நிதி மந்திரியும் கருத்தரங்கு ஒன்றை நடத்தினுர்கள். இந்த கருத்தரங்கின் தலையங்கம் ''சிங்கப்பூரில் எதிர் வரும் பத்தாண்டுகளில் தொழில் உருவாக்கலா அல்லது தொழில் இழப்பா'' என்பதாகும். வேறு வகையில் கூறுவதானுல் முதலாளித்துவ முறையானது உலகம் முழுவதும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள வேளையில் இன்று சிங்கப்பூரில் அவர்கள் செய்யும் எல்லா முயற்சிகளாலும் அதிகமானேருக்கு வேலை வழங்க முடியுமா அல்லது வேலையில் இருப்பவர்கள் அவற்றை இழக்க வேண்டி நேருமா என்று யோசிக்க வேண்டிய நிலையில் இருக்கின்ருர்கள்.

ஆனுல் இங்கோ [illegible] முதலீடு செய்வதற்கு வேண்டிய தீவிர ஆயத்தங்கள் எதுவும் செய்யாமல் அடுத்த ஆறு வருடங்களில் இலட்சோப இலட்சம் பேருக்கு வேலை வழங்கப் போவதாகக் கூறுகிருர்கள். வேலை கிடைக்கும் சிலரும் தாச நிறுவனத்து ஊழியர்களை விட மோசமான நிலையில் இருப்பார்கள். தொழிலுக்கு எவ்வித பாதுகாப்புமிருக்காது. வேலை நிறுத்த உரிமை இருக்காது. தொழில் வழங்குவோருடன் தொழிற் சங்கங்கள் தொடர்பு வைப்பதற்கு உரிமை இருக்காது. அவர்கள் அடிமைகள் போல் வேலை செய்ய வேண்டும். இந்த நகல் சட்டத்தின் மூலம் உங்களையும் அடிமைகளாக்க முயற்சிக்கிருர்கள். அதற்காகவே இராணுவத்தை விஸ்தரிக்கிருர்கள். பொலீஸை விஸ்தரிக்கிருர்கள்.

30 வருடங்களுக்கு முன்னர் நான் சங்கத்தின் பொதுச் செயலாளர் பதவியைப் பொறுப்பேற்றபோது 30 ஆயிரத்துக்கு மேலான அங்கத்தவர்கள் எமது சங்கத்தில் இருப்பார்களென்று நான் ஒரு போதும் நினைக்கவில்லை. சி. எம். யு. அநேக நாடுகளில் பிரபல்யமடையுமென்றும் உலகம் முழுவதுமுள்ள சிறந்த போராடும் சங்கங்களுள் ஒன்ருக இலங்கையில் திகழுமென்று நான் ஒரு போதும் எண்ணவில்லை.

இங்கு சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்திற் கிணங்க எந்த நேரத்திலாவது இந்நகல் சட்டம் சட்டமாக்கப்பட்டாலோ இல்லாவிட்டாலோ நாம் சிறைக்குப் போக நேரிட்டாலோ இல்லாவிட்டாலோ போராட வேண்டுமென்று தீர்மானித்தால் நான் உங்களுடன் பொதுச் செயலாளர் என்ற ரீதியில் சேர்ந்து போராடுவேன். ஜே. ஆர். ஜயவர்தனுவும் அவருடைய பொலீஸும் சி. எம். யு. ஆட்களை சிறையில் நிரப்பி விட்டு தேயிலை, ரப்பர் மற்றும் தெங்குப் பொருள் வர்த்தகத்தை நடத்த முடியுமா என்பதைப் பார்ப்போம்.

இத்தீர்மானத்தோடு இணங்காவிட்டால் நீங்கள் எதிர்த்து வாக்களிக்கலாம். அமைச்சினுல் சொல்லப்பட்டவற்ருல் அல்லது இப்படியானதொரு வெள்ளையறிக்கையை நல்ல எண்ணமில்லாது யு.என்.பி. அரசாங்கம் இம்மாதிரி ஒரு போதும் கொண்டு வந்திருக்காது என்ற நம்பிக்கையால் இத்தீர்மானத்தைப் பற்றி சரியாகப் புரியாவிட்டால் நீங்கள் வாக்களிக்கத் தேவையில்லை. இந்த வெள்ளையறிக்கையிலடங்கிய விஷம் காரணமாக அதனை நாம் முற்ருக நிராகரிக்க வேண்டுமென்றும் அந்த விஷத்தை உங்கள் தொண்டையில் திணிக்க அவர்கள் முற்பட்டால் நாம் அமைப்பாகி அப் பிரேரணைகள் நடைமுறைப் படுத்தப்படுவதற் கெதிராகப் போராட வேண்டும் என்று நீங்கள் முடிவுக்கு வந்த பின்பே தீர்மானத்திற்கு ஆதரவாகக் கைகளை உயர்த்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தினுல் கொழும்பு-13 விவேகானந்தர் மேட்டில் அமைந்துள்ள சங்கர் சன்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.